# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.
CC-1/2024

Prosecution witness – PW 6

| | | |
|---|---|---|
| Name | : திரு.முனியசாமி | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(Accused present)

03.02.2026 – 03.15 PM

<u>முதல் விசாரணை</u>:–

1. நான் கடலாடி வட்டம் மூக்கையூர் வருவாய் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கு சம்பவ சமயத்தின் போது நான் மேலச்செல்வனூர் குரூப் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து கூடுதல் பொறுப்பாக கடலாடி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தேன். சாட்சி முத்துக்குமாரை தெரியும், அவர் கடலாடி கிராம உதவியாளர் ஆவார்.

2. கடந்த 04.01.2023ம் தேதியன்று நான் கடலாடி கிராம நிர்வாக அலுவலகத்தில் இருந்த போது காலை 10.00 மணியளவில் கடலாடி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் என்னை அழைத்தன் பேரில் நானும், கிராம உதவியாளர் முத்துக்குமாரும் அன்று காலை 10.15 மணியளவில் கடலாடி காவல் நிலையம் சென்றோம். எதிரியின் ஊரான நெறிஞ்சிபட்டிக்கு அழைத்துச்சென்று காலை 10.15 மணியளவில் போலீசார் எங்கள் முன்னிலையில் விசாரணை செய்த போது எதிரி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.3 ஆகும்.

3. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் இந்த வழக்கு தொடர்புடைய நகை திருட்டு சம்பவத்தை ஒத்துக்கொண்டார். அதன் பேரில் அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமுலத்தை எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார்கள். போலீசார் பதிவு செய்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், கிராம உதவியாளர் முத்துக்குமாரும்

கையொப்பம் செய்தோம். பின்பு மேற்படி வழக்குச்சொத்தை எதிரி அவரது வீட்டில் வைத்திருந்ததை எடுத்து ஆஜர் OBJசெய்தார். கல்தோடு, மோதிரம், ஓம் போட்ட டாலர், தங்கக்காயின், ரூ.50,000/- பணம் ஆகியவற்றை போலீசார் அத்தாட்சியின் பேரில் காலை 10.15 மணியளவில் கைப்பற்றினார்கள். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.4 ஆகும். அதில் நானும் கிராம உதவியாளர் முத்துக்குமாரும் கையொப்பம் செய்தோம்.

4. மேலும் இச்சம்பவத்தில் திருடப்பட்ட மீதமுள்ள நகை வங்கியில் வைத்திருப்பதாக சொன்னதன் பேரில் கமுதி, தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கிக்கு சென்று தங்க டாலர் போட்ட 49.500 கிராம் எடையுள்ள செயின் ஒன்றை போலீசார் அத்தாட்சியின் பேரில் கைப்பற்றினார்கள். மதியம் 02.15 மணியளவில் கைப்பற்றினார்கள். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.5 ஆகும். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ள தங்க நகை பொருட்கள் மற்றும் பணத்தை தான் போலீசார் எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார்கள். அந்த புகைப்படங்கள் எண்ணம் -4 உடன் கூடிய குறுந்தகடு அ.சா.ஆ.6 ஆகும். இவ்வழக்கின் எதிரி சேவுகராஜை தெரியும், அவர் ஆஜர் எதிரி தான். இது தொடர்பாக போலீசார் விசாரித்தார்கள். போலீசார் விசாரணையில் மேற்சொன்ன தகவல்களை தான் சொன்னேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: -</u>

இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை எந்த தேதியில் எங்கே வைத்து விசாரித்தார்கள் என்றால் 04.01.2023ம் தேதியில் நெறிஞ்சிப்பட்டி கிராமத்தில் வைத்து விசாரணை செய்தார்கள். போலீசார் என்னை எந்த தேதியில் போன் மூலம் அழைத்தார்கள் என்றால் 04.01.2023ம் தேதி. எத்தனை மணிக்கு காவல் நிலையம் சென்றேன் என்றால் காலை 10.00 மணிக்கு எவ்வளவு நேரம் காவல் நிலையத்தில் இருந்தேன் என்றால் 1 நிமிடம் இருந்தேன். காவல் நிலையத்திலிருந்து நெறிஞ்சிப்பட்டிக்கு எத்தனை வாகனத்தில் சென்றோம் என்றால் நான் என்னுடைய இருசக்கர வாகனத்தில் கிராம உதவியாளருடன் சென்றேன். நான் நெறிஞ்சிப்பட்டி கிராமத்தற்கு

செல்லும் போது சுமார் 10.15 மணி இருக்கும். கடலாடியிலிருந்து எந்த வழியாக நெறிஞ்சிப்பட்டிக்கு சென்றோம் என்றால் கோவிலாங்குளம் வழியாகத்தான் சென்றோம்.

வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை எங்கு வைத்து கையொப்பம் வாங்கினார்கள் என்றால் நெறிஞ்சிப்பட்டியில் வைத்து கையொப்பம் வாங்கினார்கள். எத்தனை கையொப்பம் வாங்கினார்கள் என்றால் 1 கையொப்பம் மட்டும் வாங்கினார்கள். என்னிடம் கையொப்பம் வாங்கிய பேப்பரில் தட்டச்சு செய்யப்பட்டதா அல்லது வெள்ளைப்பேப்பரா என்றால் கையால் எழுதியிருந்த பேப்பரில் கையொப்பம் செய்தேன். நான் கையொப்பம் செய்த போது எத்தனை மணி இருக்கும் என்றால் தற்போது எனக்கு ஞாபகமில்லை. நெறிஞ்சிப்பட்டி சென்ற பின் எத்தனை மணிக்கு கையொப்பம் செய்தேன் என்றால் சுமார் 10 நிமிடம் இருக்கும். அப்போது என்னுடன் யார் யார் இருந்தார்கள் என்றால் கிராம உதவியாளர், போலீசார் மற்றும் எதிரி சேவுகராஜ் இருந்தார். வேறு தனிநபர்கள் யாரும் இல்லை. நகை ஆசாரி யாரும் உடன் இருந்தார்களா என்றால் யாரும் இல்லை.

நான் கையொப்பம் செய்த பேப்பரில் படித்து பார்த்த தான் கையொப்பம் செய்தேன். என் முன்னிலையில் கைப்பற்றப்பட்ட மோதிரம் எத்தனை கிராம் என்றால் எனக்கு தெரியாது. கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பொருட்களின் எடை எவ்வளவு என்றால் எனக்கு தெரியாது. கைப்பற்றப்பட்டதாச சொல்லப்படும் பொருட்கள் எங்கு வைத்து கைப்பறப்பட்டதா என்றால் எதிரி சேவுகராஜ் வீட்டில் வைத்து கைப்பற்றப்பட்டது. வழக்கு சம்மந்தமாக காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் எதுவும் வாங்கினார்களா என்றால் இல்லை. நெறிஞ்சிப்பட்டியில் வைத்து ஒரு கையொப்பம் செய்தேன் தவிர வேறு இந்த வழக்கு சம்மந்தமாக எந்த ஆவணத்திலும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான்.

நெறிஞ்சிப்பட்டி கிராமத்தில் எவ்வளவு மணி நேரம் இருந்திருப்போம் என்றால் சுமார் அரை மணி நேரம். வழக்கின் புகார்தாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும்

சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி